**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உத்தமபாளையம்.**

**முன்னிலை: திருமதி.M.பிரவீணா, M.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி
**உத்தமபாளையம்.**

2026-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05-ம் நாள் புதன்கிழமை

**அசல் வழக்கு எண்.95/2025**
(Original Suit CNR No. TNTH06-000-124-2025)

S. முருகன் . . . வாதி

/எதிராக/

N. ஜார்ஜ்

. . . பிரதிவாதி

----

இவ்வழக்கு என் முன்பாக 04.08.2026 ஆம் தேதி இறுதி விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.M.அருண்ஜவகர், M.A.,B.Ed.,B.L., அவர்கள் ஆஜராகியும், இவ்வழக்கு குறித்த அழைப்பாணையானது பிரதிவாதிக்கு சார்வு செய்யப்பட்டும், மேற்படியார் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தினால் மேற்படியாருக்கு எதிராக 30.01.2026ம் தேதியில் ஒரு தலைப்பட்ச உத்தரவானது இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டும், வாதி தரப்பு வாதம் மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றத்தால் பகரப்படும்

**தீர்ப்புரை**

வாதிக்கு பிரதிவாதியை பிராது தொகையான மதிப்பு ரூ.70,200/- (ரூபாய் எழுபதாயிரத்து இருநூறு மட்டும்)யை செலுத்தி வைக்கும் படியும், ஷை பிராமிசரி

நோட்டிற்குண்டான அசல் தொகை ரூ. 60,000/—க்கு பிராது தேதி முதல் தொகை வசூலாகும் தேதிவரை மாதம் ஒன்றுக்கு 100/—க்கு ரூ.1.00/— வீதம் வட்டி செலுத்தும் படியும், இவ்வழக்கின் செலவுத் தொகை கோரியும் தாவா தாக்கல்.

**2. வழக்குரையின் சுருக்கம்**

வாதியிடம் பிரதிவாதி கடந்த 04.03.2024 ம் தேதி ரூபாய் 60,000/— (ரூபாய் அறுபதாயிரத்தை) பிரதிவாதியின் குடும்ப செலவுகளுக்காகவும், விவசாய கடனாகவும், கடனாக வாதியின் வீட்டில் வைத்து ரூ. 60,000/—யை பெற்றுக் கொண்டு மேற்படி தொகைக்கு ஆதரவாக பிரதிவாதி வாதியின் பெயருக்கு பிராமிசாரி நோட்டு எழுதிக் கொடுத்ததாகவும், அதில் வாதிக்கோ அல்லது அவரின் உத்தரவு பெற்ற நபர்களுக்காவது வேண்டும் போது மேற்படி அசல் மற்றும் வட்டிக்கு உண்டான தொகையை செலுத்திவிட்டு மேற்படி பிராமிசாரி நோட்டை வாபஸ் பெறுவதாக உறுதி கூறியதாகவும், மேற்படி கடன் தொகைக்கு ரூ.60,000/—மாதம் ஒன்றுக்கு ரூ. 100/—க்கு வட்டி ரூ. 1.00/— வீதம் வட்டி செலுத்துவதாக ஒப்புக் கொண்டு பிரதிவாதி மேற்படி பிராமிசாரி நோட்டை கடந்த 04.03.2024 ம் தேதி வாதியின் பெயருக்கு பூர்த்தி செய்து எழுதிக் கொடுத்துள்ளதாகவும், ஆனால் நாளது தேதிவரை அசலோ, வட்டியோ பிரதிவாதி யாதொரு தொகையும் வாதிக்கு செலுத்தாமல் இருந்து வந்ததாகவும், மேற்படி தொகையை செலுத்தும்படி பிரதிவாதி, வாதி பலமுறை நேரிலும், ஆட்கள் மூலமாகவும் தொடர்ந்து கேட்டு வந்து பிரதிவாதி பணத்தை திரும்பி செலுத்தாமல் காலம் தாழ்த்தி வருவதுடன் அதற்குரிய அசலையோ, வட்டியையோ திருப்பிசெலுத்தாமல் இருந்து வருவதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

3. மேலும், மேற்படி வாதி, பிரதிவாதியிடம் வழக்குரை பிராமிசரி நோட்டிற்குண்டான அசல் மற்றும் வட்டி தொகைகளை செலுத்திவைக்கக்கோரி தனது வழக்கறிஞர் மூலம் கடந்த 27.05.2026 ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு ஒன்றை பிரதிவாதிக்கு அனுப்பியதாகவும், ஆனால் மேற்படி வாதியின்

வழக்கறிஞர் அறிவிப்பினை கடந்த 29.05.2025ம் தேதியில் பிரதிவாதி பெற்றுக் கொண்டும், மேலும் பிரதிவாதி பதில் அறிவிப்பு எதுவும் தற்போது வரை அனுப்பாமல் இருந்து வருவதாகவும், மேற்படி பிராமிசரி நோட்டிற்குண்டான அசல் மற்றும் வட்டித் தொகையை செலுத்தாமல் காலம் கடத்திவருவதாகவும், ஆகவே, வாதி பிரதிவாதியிடமிருந்து வழக்குரை பிராமிசரி நோட்டிற்குண்டான அசல் மற்றும் வட்டித் தொகை வகையறாக்களை சட்டப்படி வசூல் செய்ய உத்தரவிட வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கு குறித்த அழைப்பாணையானது பிரதிவாதிக்கு சார்வு செய்யப்பட்டும், பிரதிவாதி தோன்றாதரப்பினர்களாக இருந்ததால், மேற்படியாருக்கு எதிராக 30.01.2026 தேதியில் ஒருதலைபட்ச உத்தரவானது இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

5. வாதி தரப்பில் வாதியானவர் வா.சா.1 ஆகவும், மணி என்பவர் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

6. **இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய வினா யாதெனில், வாதி தாவாவில் கோரிய பரிகாரமானது அவருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே ஆகும்.**

7. **வாதி தரப்பு வாதம் யாதெனில்,** தாவா பிரதிவாதியானவர் தனது குடும்ப செலவுகளுக்காகவும், விவசாய கடன்களுக்காகவும் வாதியிடம் 04.03.2024ம் தேதியில் ரூ.60,000/-ம் கடன்பெற்றுக்கொண்டு, அதற்கு ஆதரவாக மேற்படி தேதியில் கடனுறுதிச்சீட்டு ஒன்றை வாதிக்கு எழுதிக்கொடுத்ததாகவும், மேற்படி தொகைக்கு ரூ.100/-க்கு ரூ.1/- வீதம் வட்டி செலுத்துவதாக பிரதிவாதி ஒப்புக்கொண்டு கடனுறுதி சீட்டு பூர்த்தி செய்துள்ளதாகவும், அசலையோ

அல்லது வட்டியையோ பிரதிவாதியானவர் தாவா வாதிக்கு செலுத்த முன்வரவில்லை என்றும், இது குறித்து தாவா பிரதிவாதிக்கு 27.05.2026 ம் தேதியில் வாதி சட்ட அறிவிப்பு அனுப்பியதாகவும், மேற்படி அறிவிப்பை பிரதிவாதியானவர் 29.05.2025 தேதியில் பெற்றுக்கொண்டும், மேற்படி தொகையை திரும்ப செலுத்த முன்வரவில்லை என்றும், ஆகவே தாவா தொகையான ரூ.70,200/-ஐ பின்வட்டியுடன் சேர்த்து பிரதிவாதியானவர் வாதிக்கு செலுத்த உத்தரவிடுமாறு வாதிடப்பட்டது.

8. இவ்வழக்கில் வாதியானவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, 04.03.2024 தேதியிட்ட கடனுறுதி சீட்டானது வா.சா.ஆ.1 ஆகவும், 27.05.2025 ம் தேதியிட்ட அஞ்சலக ரசீதுடன் கூடிய சட்ட அறிவிப்பு வா.சா.ஆ.2 ஆகவும், மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பினை பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை வா.சா.ஆ. 3 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

9. வா.சா.ஆ 1 ஆன 04.03.2024 ம் தேதியிட்ட கடனுறுதி சீட்டை பரிசீலினை செய்யும்போது தாவா பிரதிவாதியானவர் வாதியிடமிருந்து மேற்படி தேதியில் தனது குடும்ப செலவிற்காகவும், விவசாயக்கடனுக்காகவும் ரூ.60,000/-த்தை கடன் பெற்றுள்ளதும், மேற்படி தொகைக்கு ரூ.100/-க்கு ரூ.1/-வீதம் வட்டியானது நிர்ணயம் செய்யப்பட்டு, மேற்படி கடனுறுதிச்சீட்டானது பிரதிவாதியால் வாதிக்கு பூர்த்தி செய்து வழங்கியுள்ளது தெரியவருகிறது. மேலும், மேற்படி கடனுறுதி சீட்டில் முதலாவதாக சாட்சி கையொப்பம் செய்த மணி என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் வாதி வழக்குரையில் எடுத்துரைத்துள்ள பொருண்மைகளை அனுசரித்தவாறே சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கில் வாதி தரப்பில் தாவா பிரதிவாதியானவர் வா.சா.ஆ.1 ல் கண்ட அசலையோ அல்லது வட்டியையோ செலுத்தவில்லை என்று எடுத்துரைத்து வா.சா.ஆ 2 ன் மூலம் சட்ட அறிவிப்பு அனுப்பியுள்ளதும், அதை பிரதிவாதியானவர் வா.சா.ஆ 3 ன் மூலம் பெற்றுக்கொண்டுள்ளதும் தெரியவருகிறது. மேலும், தாவா பிரதிவாதியானவர் வாதிக்கு செலுத்தவேண்டிய

அசல் தொகையாக ரூ.60,000/—த்தையோ, அதற்கான வட்டியையோ செலுத்த முன்வரவில்லை என்பதும் தெரியவருகிறது.

10. வாதி தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிய, சான்றாவணங்களை ஒருங்கிணைத்து பரிசீலினை செய்யும்போது, தாவா பிரதிவாதியானவர் வா.சா.ஆ 1 ன் மூலம் வாதியிடமிருந்து ரூ.60,000/—த்தை 04.03.2024 ம் தேதியில் கடன் பெற்றுள்ளதும், ரூ.100/—க்கு ரூ.1/— வட்டியானது நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதும், மேற்படி கடனுக்கு ஆதரவாக வா.சா.ஆ 1 ஏற்படுத்திக்கொடுத்துள்ளதும், அசலையோ, வட்டியையோ பிரதிவாதியானவர் செலுத்தவில்லை என்பது தெரியவருகிறது. வாதி தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிய, சான்றாவணங்களை பொய்பிக்கும் வகையில் பிரதிவாதி தரப்பில் எவ்வித ஆவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மேலும், பிரதிவாதியானவர் நீதிமன்றத்தில் ஆஜராகியும், பின்னிட்டு தொடர்ந்து ஆஜராகாத காரணத்தினால் மேற்படியாருக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவானது இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான சூழ்நிலையில், வாதி தனது வழக்கை இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101 ன் கீழ் தகுந்த சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலம் நிரூபணம் செய்துள்ளதாகவோ முடிவு செய்கிறது. ஆகவே, தாவா பிரதிவாதியானவர் வாதிக்கு தாவா தொகையான ரூ.70,200/—ஐ பின்வட்டியுடன் சேர்த்துக்கொடுக்க இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**11. முடிவாக,**

தாவா அனுமதிக்கப்பட்டு, தாவா தொகையான ரூ.70,200/—ஐ பிரதிவாதியானவர் வாதிக்கு செலுத்த கடமைப்பட்டவர் என்றும், அசல் தொகையான ரூ.60,000/—த்திற்கு தாவா தாக்கல் செய்த தேதி முதல் தாவா தீர்ப்பு தேதி வரை 9% வட்டியும், மேற்படி தொகை வசூலாகும் தேதி வரை 6 % வட்டி செலுத்தவேண்டும் என்றும், செலுத்த செலவுத்தொகையுடன் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 05 ஆம் தேதி திறந்த நீதிமன்றத்தில் அவையறிய தீர்ப்புரை பகரப்பட்டது.

PRAVEENA Digitally signed by PRAVEENA Date: 2026.08.05 16:59:36 +0300

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**உத்தமபாளையம்.**

**வாதி தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| வா.சா.1. | முருகன் |
| வா.சா.2 | மணி |

**வாதி தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 04.03.2024 | கடனுறுதி சீட்டு |
| வா.சா.ஆ.2 | 27.02.2025 | அஞ்சலக ரசீதுடன் கூடிய வழக்கறிஞர் அறிவிப்பு |
| வா.சா.ஆ.3 | -- | வழக்கறிஞர் அறிவிப்பினை பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை |

**பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை.**

PRAVEENA Digitally signed by PRAVEENA Date: 2026.08.05 16:59:43 +0300

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**உத்தமபாளையம்.**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
உத்தமபாளையம்
**சீரான/வரைவுத்தீர்ப்புரை**
அசல் வழக்கு எண். 95/2025
நாள் : 05.08.2026